மாலை முரசு
பக்கங்கள் 17
முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 29 வெள்ளிக்கிழமை 15.09.2023 அதிர்வு 46

## பஸ்ஸில் இருந்து இறங்கியவர் கீழே மயங்கி விழுந்து மரணம்!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – நாவற்குழியில் பணியிடத்துக்குச் செல்வதற்காக வருகை தந்தவர் பஸ்ஸில் இருந்து 04

### தமிழர் தேசமெங்கும் உணர்வெழுச்சி

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பம்






(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களின் விடுதலைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாநோன்பு இருந்து உயிர்த் தியாகம் செய்த தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கிலும், தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசமெங்கும் இன்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பமானது. 05

## யாழ். பல்கலையிலும் நினைவேந்தல்



(எஸ்.நிதர்ஷன்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலின் ஆரம்ப நிகழ்வு அவர் கல்வி கற்ற யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் இன்று மதியம் 12:30 மணியளவில் நடைபெற்றது. 04

## சாய்ந்தமருதில் ஹக்கீம் கால் வைக்கவே கூடாது!

### கொடும்பாவி எரித்துப் போராட்டம்





04

## விசாரணைக் குழுவை நியமித்தார் ஜனாதிபதி

### தலைவராக நீதியரசர் இமாம்



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான "சனல் 4" தொலைக்காட்சியின் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குழுவை நியமித்துள்ளார். 04





## கசிப்புக் கும்பலைத் துரத்திச் சென்றவேளை மாயமான பொலிஸ் அதிகாரி சடலமாக மீட்பு

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சியில் கசிப்புக் கும்பலைத் துரத்திச் சென்ற நிலையில் காணாமல்போன பொலிஸ் உத்தியோகஸ்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 04

# இந்தியாவில் இருந்து 6 ஆயிரம் சுற்றுலாவிகள் யாழ்ப்பாணத்துக்கு

## காங்கேசன் துறைமுகம் ஊடாக வருகை

காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக இந்தியாவில் இருந்து 6000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

'கொர்டேலியா குரூஸ்' கப்பல் சேவையை ஆரம்பித்து 3 மாத காலப் பகுதிக்குள் இவர்கள் வருகை தந்துள்ளனர் என்று இந்திய துணைத் தூதரகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜுன் 16 ஆம் திகதி தொடக்கம் 9 பயணங்களின் போது, சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாண நகரத்தில் ஒரு மறக்க முடியாத விடுமுறை அனுபவத்தைத் தொடங்கினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்கரைகள் மற்றும் கோவில்களின் அற்புதமான அனுபவத்தை சுற்றுலாப் பயணி பெற்றுள்ளார்.




வட மாகாண சுற்றுலாப் பணியகம் மற்றும் மாவட்ட செயலகத்தின் உதவியுடன் தெல்லிப்பளை பிரதேச செயலகமும் வலி வடக்கு பிரதேச சபையும் ஏற்பாடுகளை செய்திருந்ததுடன் வடமாகாண ஆளுநர் முயற்சிகளை ஒருங்கிணைத்தார்.

இந்த மேம்படுத்தப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகை இப்பகுதியில் உள்ள உள்ளூர் சமூகததுக்கும் உதவியது. தொழில் முனைவோருக்கு புதிய வழிகளை வழங்கியுள்ளது என்றும் அந்தச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

# அரசால் தடை விதிக்கப்பட்ட வலைகளை பயன்படுத்தாதீர்!

## கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான்

**(கே. எ. ஹமீட், நூருல் ஹுதா உமர், அபு அலா)**

அரசால் தடை விதிக்கப்பட்ட வலைகளை எவரும் பயன்படுத்த வேண்டாம்.

திருகோணமலையில் மீனவர்கள் சட்ட விரோத மீன்பிடிக்கு எதிராக எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்தனர்.

இந்த நிலையில் பிரச்சினை தொடர்பாக மீனவ சங்கத்தினர், கடற் படையினர், கரையோர பாதுகாப்பு படையினர், பொலிஸ் அதிகாரிகள், அதி ரடி படையினர் ஆகியோருடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடல் நடத்தினார்.

இதனை அடுத்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசால் தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்த கூடாது. சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடுபவருக்கு எதிராக மீன்பிடி திணைக்களம், கரையோரப் பாதுகாப்பு படையினர், பொலிஸ் அதிகாரிகள், அதிரடி படையினர் ஆகியோர் சட்ட நடவடிக்கை மேற கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். மீனவர் அமைப்புக்கு ஆதரவளிக்கும் வகையில் ஆளுநர் கருத்து வெளியிட்டார்.


# முதுமாணிப் பட்டம் பெற்ற 97 வயதான மூதாட்டி !

களனிப் பல்கலைக்கழகத்தில் 97 வயதான மூதாட்டி வயோதிப பெண் ஒருவர் முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளார்.

இந்தப் பல்கலைக்கழகத்தின் பாலி பௌத்த கற்கைகள் முதுகலைப் பட்டதாரி நிறுவனத்தால் இவ்வருடம் நடத்தப்பட்ட பௌத்த கற்கையிலேயே அவர் முதுமாணி பெற்றுள்ளார்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் கற்ற 97 வயதான விதானகே லீலாவதி அஸ்லின் தர்மரத்ன என்பவரே இந்தப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

அந்த பல்கலைகழகத்தில் கற்கும் மூத்த மாணவியும் அவர்தான் என



தெரியவந்துள்ளது. 7 பாடங்களைக் கொண்ட இந்த முதுகலைப் பட்டத்துக்கான பாடங்களின் பரீட்சையில் அவர் தோற்றியுள்ளார்.

அஸ்லின் தர்மரத்ன தனது 94 ஆவது வயதில் வித்யோதயா பல்கலைக்கழகம் நடத்திய திரிபிடக தர்மம் மற்றும் பாலி மொழி பரீட்சையில் சித்தியடைந்தார்.

இறுதித் தேர்வு எழுதும் போது அவர் 6 பெண் பிள்ளைகளை கவனித்து கொண்டு வாழ்க்கையை எதிர்கொண்டு இந்த தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

பத்திரத்துறை பதிவாளராக தனது வாழ்க்கையைத் தொடங்கிய அவர் 1952 ஆம் ஆண்டு அந்தத் துறையில் பரீட்சையில் சித்தியடைந்த முதல் பெண்மணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

97 வயதில் கல்வித்துறையில் சாதனை பெண்ணாக திகழும் விதானகே லீலாவதிக்கு பல்வேறு தரப்பினரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.



# வவுனியாவில் தமிழர்களின் விவசாய நிலத்தில் சிங்களவர்களுக்கு மயானம் அமைக்க முயற்சி!

## அளவீட்டுப் பணிக்குக் கடும் எதிர்ப்பு

(கே.வசந்தரூபன்)

வவுனியா பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட தமிழ் கிராமமான கருப்பனிச் சாங்குளம் கிராமத்தில் உள்ள விவசாய நிலத்தை அருகில் உள்ள கொக்குவெளி பகுதி சிங்கள மக்களுக்கு மயானம் அமைக்க வழங்குவதற்கு அளவீடு செய்ய வந்த நில அளவைத் திணைக் களத்தினர் மக்களது எதிர்ப்பையடுத்து அங்கிருந்து வெளியேறிச் சென்றிருந் தனர்.

இன்று காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவரு வதாவது,

வவுனியா பிரதேச செயல பிரிவுக்குட் பட்ட கருப்பனிச்சான்குளம் கிராமம் தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் கிராமம் ஆகும். குறித்த கிராமத்தில் வசித்து வந்த தமிழ் மக்கள் யுத்தம் காரணமாக இடப்பெயர்ந்து சென்றதுடன், யுத்தம் முடிவடைந்த பின் மீண்டும் வருகை தந்து தமது காணிகளில் குடியேறி, விவசாய நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த கிராமத்தில் தமது மயானம் இருந்தது எனத் தெரி வித்து அருகில் உள்ள கொக்குவெளி சிங்கள கிராம மக்கள் இரு பிக்குகளின் தலைமையில் குறித்த பகுதியில் அமைந்துள்ள விவசாய காணி யொன்றை உரிமை கோரி வந்ததுடன், தற்போது அதனைத் தனிநபர் ஒருவர் ஆக்கிரமித்துள்ளது எனவும் தெரிவித்து குழப்பம் விளைவித்து வந்தனர்.

இது தொடர்பில் அந்தக் காணியை விவசாய நடவடிக்கைக்குப் பயன்படுத்தி வரும் கருப்பனிச்சாங்குளம் கிராமத் தைச் சேர்ந்த நபர் கருத்துத் தெரிவிக் கையில்,

"இது எனது பரம்பரை வழியான காணி. இங்கு எனது மூதாதையர்கள் முதல் நாங்கள் வரை நீண்ட காலமாக குடியிருந்து வருகின்றோம். பின்னர் இடம்பெயர்ந்து சென்ற நிலையில் மீண்டும் வருகை தந்து காணியில் விவசாயச் செய்கையை முன்னெடுத்து வருகின்றோம். தற்போது எமது காணி யில் காய்க்கும் நிலையில் பெரிய தென்னை மரங்களும் நிற்கின்றன. இந்நிலையில் எனது காணியில் சிங்கள



மக்களுக்கான மயானம் இருந்தது எனக் கூறி, அதனை மீள அமைப்பதற் கான செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டு, எனது காணிக்கான அனுமதி பத்திரத்தைக் கூட பிரதேச செயலகத்தால் வழங்காமல் முடக்கி வைத்துள்ளனர்.

எனது காணியில் முன்பு மயானம் இருந்தமைக்கான எந்தச் சான்றுகளும் இல்லை. சடலங்கள் புதைக்கப்பட்டமைக் கான சான்றுகள் கூட இல்லை.

குறித்த சிங்கள கிராமத்துக்கு அண்மையில் மூன்று மயானங்கள் உள்ளன. அவர்கள் அங்கு சடலங்க ளைப் புதைக்க முடியும். தற்போது எனது காணியைச் சுற்றி தமிழ் மக்கள் குடியமர்ந்துள்ளனர். எனவே, இங்கு மயானம் அமைக்கும் செயற்பாட்டை முன்னெடுப்பது நீதியான செயற்பா டாகத் தெரியவில்லை." – தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பகுதிக்கு பிக்கு இருவரின் தலைமையில் வருகை தந்த சிங்கள மக்கள் அந்தக் காணியில் தங்களது மூதாதையர்கள் புதைக்கப் பட்டுள்ளனர் எனவும், அந்தக் காணியில் மயானம் அமைப்பதற்காக அதனை மீட்டுத் தருமாறும் பிரதேச செயலாளரிடம் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசன் மற்றும் பொலிஸார் இரு தரப்புடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். குறித்த காணி 1967 ஆம் ஆண்டில் மயானமாக இருந்தது என்று நில அளவைத் திணைக்களத்தின் கள ஆய்வு குறிப்பில் இருக்கின்றது எனப் பிரதேச செயலாளர் இதன்போது தெரிவித்தார்.

எனினும், நில அளவைத் திணைக் களத்தின் 2019 அறிக்கையின் படி அது வன இலாகாவுக்குரிய காணியாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மயானம் இருந்ததாக எந்தப் பதிவுகளும் இல்லை எனத் தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸாருடன் முரண்பட்ட தமிழ் மக்கள், இப்படி ஒரு மயானம் இருப்பதாக பிரதேச சபையின் அறிக் கையில் கூட இல்லை. நாம் இந்தக் காணியை அளவீடு செய்வதற்கு இடமளிக்கமாட்டோம். மயானம் அமைப்பதற்கு சிங்கள கிராமத்திலேயே பல அரச காணிகள் இருக்கின்றன. அங்கு அதனை அமைக்க முடியும் எனத் தெரிவித்ததுடன், நீண்டகாலமாக குடியிருக்கும் நிலையில் நீதிமன்றம் ஊடாக இதற்குத் தீர்வைக் காணுமாறும் தெரிவித்தனர்.

எனினும், குறித்த காணியை நில அளவீடு செய்து சிங்கள மக்களின் மயானத்துக்காக ஒதுக்குமாறு பௌத்த மதகுரு வருகை தந்த அதிகாரிகளிடம் பலமுறை கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து இந்த விடயம் தொடர் பாக நீதிமன்றம் சென்று அடுத்தகட்ட நடவடிக்கையை எடுக்குமாறு பிரதேச செயலாளர் இரு தரப்புக்கும் தெரிவித்தது டன், அதுவரை தற்காலிகமாக அயலில் உள்ள மயானத்தில் இறந்தவர்களின் சடலங்களைப் புதைக்குமாறும் சிங்கள மக்களுக்குத் தெரிவித்தார். இதனைய டுத்து நிலைமை சீராகியது.

குழப்ப நிலையால் அளவீட்டுப் பணிகளுக்காக வருகை தந்த நில அள வைத்திணைக்களத்தின் அலு வலர்கள் காணியை அளவீடு செய் யாமல் திரும்பிச் சென்றனர்.

# கியூபாவில் ஜனாதிபதி ரணில்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விற்கும் கியூபா ஜனாதிபதி மிகுவல் டியெஸ்-கனெல் பெர்முடெஸுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

கியூபாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இருதரப்பு கலந்துரையாடலில், மருத்துவம், சுகாதாரம், விளையாட்டுப் பயிற்சி மற்றும் தெங்குப் பயிற்செய்கை ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டதோடு உலகளாவிய மாநாடுகளில் இருநாடுகளும் பரஸ்பர ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு இருநாட்டுத் தலைவர்களும் உடன்பாடு தெரிவித்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### பஸ்ஸில் இருந்து...

இறங்கிய நிலையில் மயங்கிக் கீழே வீழ்ந்து சாவடைந்துள்ளார்.

பனை அபிவிருத்தி சபையில் பணி புரியும் மட்டுவிலைச் சேர்ந்த மாணிக்க வாசகர் சதீஸ்குமார் என்ற 50 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

### கசிப்புக் கும்பலை...

மாத்தறையைச் சேர்ந்த சதுரங்க (வயது 28) எனும் பொலிஸ் உத்தியோகஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை பொலிஸ் குழு நேற்று முற்றுகையிட்டது. அதன்போது அங்கிருந்தவர்கள் காட்டு வழியே தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடியவர்களைப் பொலிஸார் துரத்திச் சென்ற வேளை பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் காணாமல்போயிருந்தார். அவரைத் தேடும் பணியில் பொலிஸ் குழுக்கள் ஈடுபட்டிருந்த வேளை, புதுஐயன்குளம் பகுதியில் இன்று காலை அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைகளின் பின்னரே பொலிஸ் உத்தியோகஸ்தர் உயிரிழந்தமைக்கான காரணத்தை வெளியிட முடியும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### யாழ். பல்கலையிலும்...

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தியாக தீபத்தின் தியாக வரலாற்றுப் பேருரை இடம்பெற்றது.

அதன்பின்னர் திலீபனின் திருவுருவப் படத்துக்கு ஈகைச் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

### சாய்ந்தமருதில்...

**(நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான்)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சாய்ந்தமருதுக்கு வரக்கூடாது எனவும், தலைவர் அஷ்ரப்பின் நினைவு தினத்தை வைத்து அரசியல் செய்யக் கூடாது எனவும் வலியுறுத்தி சாய்ந்தமருது ஜ/ம்மா பெரிய பள்ளிவாசலுக்கு முன்பாக இன்று ஜ/ம்மா தொழுகையைத் தொடர்ந்து கண்டனப் போராட்டம் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் 23 ஆவது நினைவு தினம் நாளை சாய்ந்தமருதில் தேசிய நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் ஹக்கீம் சாய்ந்தமருதுக்கு வரக்கூடாது என்று வலியுறுத்தி இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொதுச்சேவை ஆணைக்குழு முன்னாள் உறுப்பினரும் தேசிய காங்கிரஸின் கடந்த பொதுத்தேர்தல் வேட்பாளருமான ஏ.எல்.எம். சலீம், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்கள், ஏனைய கட்சிகளின் முக்கியஸ்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதானிகள் உட்பட பொதுமக்களின் ஒரு பகுதியினர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட கட்சியின் பிரமுகர்களுக்கு எதிராகப் போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தின்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் எச்.எம்.எம். ஹரீஸ், கல்முனை மாநகர முன்னாள் மேயர் சிராஸ் மீராசாஹிப் ஆகியோர்களின் கொடும்பாவிகளும் எரிக்கப்பட்டன.

சாய்ந்தமருது பொலிஸார் வீதிப் போக்குவரத்தைச் சீர்செய்துடன் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். கோஷம் எழுப்பிய போராட்டக்காரர்கள் சிறிது நேரத்தின் பின்னர் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

### விசாரணைக் குழுவை...

விசாரணைக் குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் ஓய்வுபெற்ற விமானப்படை தளபதி ஏ.சீ.எம்.ஜயலத் வீரக்கொடி மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ச ஏ.ஜே. சோசா ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

'சனல்-4' வெளியிட்டுள்ள தகவல் தொடர்பாக உரிய விசாரணைகளை நடத்துவதற்காக ஓய்வுபெற்ற சிரேஷ்ட அரச அதிகாரிகளை கொண்ட குழுவை நியமிக்க ஜனாதிபதி அண்மையில் தீர்மானித்திருந்தார் என்பது தெரிந்ததே.

# தியாக தீபம் திலீபனின்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

தியாக தீபம் திலீபன் 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி தமிழ் மக்களுக்காக யாழ். நல்லூரில் உண்ணாநோன்பை ஆரம்பித்து 12 ஆவது நாளில் (செப்ரெம்பர் 26ஆம் திகதி) ஈகைச்சாவைத் தழுவியிருந்தார்.

அவரின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வின் பிரதான நிகழ்வு நல்லூரிலுள்ள தியாக தீபம் நினைவாலயத்தில் வழமை போன்று இம்முறையும் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் இன்று ஆரம்பமாகிய நிகழ்வு தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, தியாக தீபம் திலீபன் 15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான 12 நாட்கள் அகிம்சை வழியில் யாழ். நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணா விரதப் போராட்டம் நடத்தி ஈகைச் சாவைத் தழுவிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.












நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேர்தல் எனும் பம்மாத்து

நீதி, நியாயத்தின்படி இல்லாமல் வெறும் அட்சரகணித எண்ணிக்கையில் பெரும்பான்மை எடுக்கும் முடிவே தீர்ப்பு என்பதால் ஜனநாயக ஆட்சி முறைமையே கேலிக்கூத்தானதுதான் என்று இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

ஜனநாயக விழுமியங்களில் மக்களின் கருத்தை வெளிப்படுத்தும் தேர்தல் முறைமையே உயர்வான அங்கம் என்று போற்றுகின்றோம். அந்தத் தேர்தல் விடயம் கூட கேலிக்கிடமாக இருப்பது ஜனநாயகத்துக்கான மதிப்பை இலங்கைத் தீவில் மேலும் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி இருக்கின்றது.

இலங்கையில் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு இருப்பதாகப் பறைசாற்றிக் கொள்ளப்படுகிறது. அரசியல் தலையீடின்றி அது சுதந்திரமாக இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்த நிலைமை நடைமுறைச் சாத்தியமாகவேயில்லை என்பதுதான் கள யதார்த்தமாகும்.

ஒரு கையால் கொடுத்து, இன்னொரு கையால் பிடுங்கும் வழிமுறைதான் இதில் ஒப்பேறியிருக்கின்றது. தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவது தொடர்பில் தீர்மானம் எடுத்து, முடிவுகளை அறிவித்து, செயல்படுத்தும் சுதந்திரமும் சுயாதீனமும் தேர்தல் ஆணையத்துக்கு இருக்கின்றது என்பதுதான் சட்ட ஏற்பாடு. அதனால் இலங்கையின் ஜனநாயக முறைமை மாண்பு பெறுகின்றது என்று பறைசாற்றுகின்றார்கள். ஆனால் உண்மையில் நிலைமை என்ன?

சுயாதீனமாக - சுதந்திரமாக - தான் எடுத்த முடிவை நடைமுறைப்படுத்துவதற்கு வக்கற்ற - செயற்திறனற்ற - நிலையிலேயே சுயாதீன தேர்தல் ஆணைக்குழு இருக்கின்றது. தேர்தலைத் தீர்மானித்து அறிவிக்கும் தேர்தல் ஆணையத்துக்கு, தேர்தலை முன்னெடுத்து நடத்துவதற்கான நிதி அதிகாரத்தில் எந்த வலிமையும் கிடையாது. வெறுமனே தேர்தலை அறிவித்துவிட்டு அது வாய் பிளந்து பார்த்திருக்க வேண்டியதுதான்.

இந்த ஆண்டின் முற்பகுதியில் தேசிய ரீதியில் உள்ளூராட்சித் தேர்தலை அறிவித்து, வேட்பாளர் நியமனப் பத்திரங்களை ஏற்றுக் கொண்ட பின்னரும் கூட, தேர்தல் நடத்த முடியாமல் விழிபிதுங்கிப் போய் நிற்கும் தேர்தல் ஆணையத்தின் சுதந்திர - சுயாதீன -அதிகாரவலிமைஇதன்மூலம்பகிரங்கமாகியிருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சித் தேர்தலை நடத்த விரும்பவில்லை. தேர்தல் நடத்தும் விடயத்தில் அவரின் அரசியல் தீர்மானத்திற்கு அமைய வாய்மூடி மௌனிகளாகப் பார்த்திருப்பதுதான் தேர்தல் திணைக்களத்தின் உயர்ந்த சுயாதீன அதிகாரமும் சுதந்திரத் தன்மையுமாகும்.

இலங்கையின் கடந்த காலத் தேர்தல் வரைபடத்தை நோக்குவோமானால் ஒரு விடயம் தெளிவாகத் தெரியும். இலங்கையின் ஜனாதிபதிகள் தத்தமது விருப்புக்கும் தேவைக்கும் ஏற்ப தேர்தல் வரைபடத்தை தம்மிஷ்டப்படி மாற்றி அமைத்தார்கள் என்பதே வரலாறாக வெளிப்படும். சில சமயங்களில் தேர்தல்களை ஒன்றாக நடத்தினார்கள். சில சமயங்களில் பிரித்துப் பிரித்துப் பகுதி பகுதியாக நடத்தினார்கள். சில சமயங்களில் தேர்தல்களை காலவரையின்றி ஒத்திப் போட்டார்கள். சில வேளைகளில் முற்கூட்டியும் தேர்தல்களை நடத்தினார்கள். இவையெல்லாம் அவ்வப்போது அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதிகளின் விருப்பப்படியே நடந்தேறின.

ஆக, இலங்கையில் சுயாதீனமான - சுதந்திரமான - தேர்தல் ஆணையம் இருப்பதாக கூறுவது வெறும் பம்மாத்துத்தான்...!



# அனர்த்த அபாயக் குறைப்புடன் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பல்

(எம். எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்துக்கான அனர்த்த அபாயக் குறைப்புடன் கூடிய வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் செயற்திட்டம் எக்டட் நிறுவனத்தால் இன்று (15) அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம் ஏ சி. அகமது சாபீர் தலைமையில் இடம்பெற்றது.

இது "இலங்கையில் சமூகம் தலைமையிலான பிரதேச அடிப்படையிலான அணுகுமுறைகள் மூலம் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துவதற்கான பேரிட அபாயக்குறைப்பை ஊக்குவித்தல்" எனும் தொனியில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் எக்டட் நிறுவன உறுப்பினர்களும் திணைக்களத் தலைவர்களும் அரச உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# பல்கலை. அனுமதிப்படிவம் தொடர்பான செயலமர்வு




(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு, மண்முனைமேற்கு, முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பல்கலைக்கழக துறை ரீதியான தெரிவும், விண்ணப்பப் படிவங்களை துல்லியமாக பூரணப் படுத்துவது தொடர்பாகவும், ஏனைய உயர்கல்வி வாய்ப்புக்கள் , தொழிற்கல்வி தொடர்பாகவும் செயலமர்வு அண்மையில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபரின் ஆலோசனை வழிகாட்டலிலும், ஆசிரியர்களின் ஒழுங்கமைப்பிலும், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் (முகாமைத்துவம்) மற்றும் ஆசிரிய ஆலோசகர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டது.

# சீரற்ற காலநிலையால் வியாபாரிகள் பாதிப்பு

(வடிவேல் டினேஸ்)



அம்பாறை மாவட்டத்தில் சில தினங்களாக மாற்ற மடைந்த கால நிலையால் விற்பனையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

சர்பத், தர்பூசணி, தெம்பிலி, தோடை போன்றன உஷ்ண காலத்தில் மக்கள் மத்தியில் அதிகளவு கேள்வி கொண்டதாகக் காணப்பட்டன.

தற்போது குளிர்ச்சியான காலநிலை காணப்படுவதால் வீதியோர் குளிர்பான விற்பனையாளர்கள் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொத்துவில் தொடக்கம் கல்முனை வரையிலான பகுதிகளில் இவ்வாறான விற்பனை நிலையங்கள் வாடிக்கையாளர்கள் இன்றி வெறிச்சோடி கிடக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் பல பகுதிகளில் சீரற்ற காலநிலை நிலவுவதுடன் குளிர்ச்சியான சூழலையும் உணரக் கூடியதாக உள்ளது என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# ‘போதைக்கு எதிரான இளைஞர்’ விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தினால், போதைப் பொருள் பாவனைக்கு எதிரான நிகழ்ச்சி திட்டங்களுள் “போதைக்கு எதிரான இளைஞர் நாம்” எனும் தொனிப் பொருளில் இளைஞர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு காத்தான்குடி மத்திய கல்லூரி ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

சம்மேளனத் தலைவர் அல்ஹாஜ் ஏ.எம்.எம்.றஊப் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எம். கே.யூ.பீ.குணரெட்ண, 24 ஆவது படைப் பிரிவின் மேஜர் ஜெனரல் டபிள்யூ. சந்திரசிறி, 243 ஆவது படைப் பிரிவின் பிரிகேடியர் கே.எம்.சீ.எஸ். குமாரசிங்க, 11 ஆவது படைப்பிரிவின் இரண்டாவது படைத்தளபதி மேஜர் ஏ.கே.ஹேவகே ஆகியோர் பங்குபற்றினர்.

பாடசாலை மாணவர்கள், அரபுக் கல்லூரி மாணவர்கள், இளைஞர் கழகங்கத்தினர் மற்றும் விளையாட்டுக் கழகங்களினை பிரதிநிதித்துவப்படுத்தி அதிகமானோர் இதில் பங்கேற்றிருந்தனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களிலிருந்து 150 இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு போதைப் பொருளுக்கு எதிரான விஷேட வதிவிட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இராணுவத்தின் ஏற்பாட்டில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.







# பொலிஸ் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமைய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடந்த காலங்க ளில் நாட்டில் ஏற்பட்ட அசாதார சூழ் நிலை காரணமாக பாதிக்கப்பட்ட பொலிஸாரின் குடும்பங்களுக்கு பொலிஸாரால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக விருந்தினராகக் கலந்து கொண்டு உலர் உணவுப் பொருள்களை வழங்கினார்.

இதன் போது கடந்த கால யுத்தத்தின் போது உயிரிழந்த பொலிஸாரின் உறவினர்கள் காணாமல் ஆக்கப்பட்ட பொலிஸாரின் உறவினர்கள் அங்க வீனமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்களின் நலன்கள் குறித்து ஆராயப்பட்டது.

கல்முனை தலைமையக பொலிஸ் பெரும் குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் , கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகரும் சுற்றுச் சூழல் பிரிவு பொறுப்பதி காரியுமான ஐயூப், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவுப் பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான குமாரி, பொலிஸ் ஆலோசனைக் குழுவின் பொதுச் செயலாளரும் காணி மத்தியஸ்த சபை பிரதான மத்தி யஸ்தருமான எம்.ஐ.எம் ஜிப்ரி மற்றும் ஆலோசனை குழுவின் உறுப்பினர் கள் பயனாளிகள் பொலிஸ் உத்தி யோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# ஓசோன் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டிகள்

(அ.அஸ்வர்)

உலக ஓசோன் தினத்தை முன்னிட்டுச் சுற்றாடல் அமைச்சும் கல்வி அமைச்சும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளன.

நாளை 16 ஆம் திகதி ஓசோன் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதன்படி நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் காற்று மாசுபட்டின் தீங்கான விளைவுகள் மற்றும் ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவங்கள் குறித்து பல்வேறு செயற்பாடுகளை இத்தினத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த தலைப்புகள் தொடர்பாக பொருத்தமான துறைசார் வல்லுநர்கள் மூலம் மாணவர்களுக்கான விரிவுரைகளை நடத்துதல், மாணவர்களின் பங்கேற்புடன் நாடகம், ஒவியம், கவிதை மற்றும் நடன நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், சுற்றாடல் முன்னோடிகளின் ஒத்துழைப்புடன் பாடசாலையினுள் சுற்றாடல் நடவடிக்கைகளை மேற்கொள் ளல் போன்ற விடயங்கள் தொடர்பில் திட்டமிடப்பட்டுள்ளது.

உரிய விடயம் தொடர்பாகச் சொற்பொழிவுப் போட்டிகளை நடத்துதல் உட்பட மாணவர்களுக்கும் சுற்றாடலுக்கும் பயனளிக்கக் கூடிய நிகழ்வுகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் முன்னோடி மாணவர்களின் தலைமைத்துவத்துடன் சுற் றாடல் முன்னோடிக் குழு உறுப்பி னர்களின் பங்களிப்புக்களையும் பெற்று இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதற்கும் கல்வி மற்றும் சுற் றாடல் அமைச்சுகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர் கௌரவிப்பு

**(கல்முனை நிருபர்)**

கல்முனை பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்திப் பிரிவானது பொது மக்களுக்கு சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது. இதன் அங்கமாக கடந்த 2022 ஆம் ஆண்டுக்குரிய சமுர்த்தி வங்கிகளின் முன்னேற்ற மீளாய்வுகளின்படி வினைத்திறன் மிக்க சேவை மேற்கொண்ட சமுர்த்தி வங்கி மற்றும் சிறந்த சேவை செய்த உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு கல்முனை பிரதேச செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்றது.

கல்முனைப் பிரதேச செயலக தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் வழிகாட்டலில் கல்முனை சமுர்த்தி வங்கிச் சங்கத்தால் அதன் முகாமையாளர் எம்.என்.நௌசாத் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ். எம்.சப்றாஸ் மற்றும் கல்முனைப் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட சமுர்த்திக் கண்காணிப்பு உத்தியோகத்தர் எம்.எஸ். எம்.ஹனிபா, பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் களும் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,வங்கியின் கட்டுப்பாட்டு சபைத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.





# பாகிஸ்தான் தூதரகக் கண்காட்சி

**(அஷ்ரப் ஏ சமத்)**

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் களனியில் உள்ள நாக்கந்த சர்வதேச பௌத்த கல்வி நிலையத்தில் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி ஒன்றை நேற்றுமுன்தினம் (13) நடத்தியது. இந்த நிகழ்வில் பாகிஸ்தானில் உள்ள பௌத்த சமயம் சம்பந்தமான கந்தகார பிராந்திய நூதனசாலைப் பொருள்கள் மற்றும் கலாசார கண்காட்சியும் இடம்பெற்றது.

பாகிஸ்தான் – இலங்கை பௌத்த யாத்திரிகைகள் பாகிஸ்தான் சுற் றுலா சென்று அங்கு தங்கி நூதன சாலைகள் மரபுரிமைப் பிரதேசங்களை பார்வையிட உரிய வசதிகள் சம்பந்தமான ஒப்பந்தமொன்றும் இரு நாடுகளுக்கிடையேயும் இதன் போது கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்வில் பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் உமர் பாருக் புல்கி தலைமை வகித்தார். அத்துடன் இலங்கை சார்பாகப் பௌத்த சாசன மத விவகார கலாசார அமைச் சர் விதுர விக்கிரமநாயக்க, முன் னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன, முன்னாள் சாபநாயகர் கரு ஜயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், மற்றும் களனி நாக்கந்த சர்வதேச பௌத்த கல்வி மத்திய நிலையத் தின் தலைமை தேரர்களும் , பாகிஸ் தான் நாட்டின் நூதன சாலை மற்றும் மரபுரிமை பணிப்பாளர் கலாநிதி அப்துல் சமத் தலைமையி லான தூதுக் குழுவினரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.




# தென்கிழக்கில் கவனவீர்ப்பு...

**(அஸ்ஹர் ஆதம் )**

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தென்கிழக்குப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்த கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று பல்கலைக்கழக வளாக முன்றிலில் இடம் பெற்றது . சங்கத்தின் தலைவர் கலாநிதி எம்.ஐ.எம்.ஜெஸீல் தலைமையில் போராட்டம் இடம்பெற்றது.

# பெண்கள் வலுவூட்டல் வேலைத் திட்டம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பெண்களின் சமூக மற்றும் பொருளாதார வலுவூட்டலுக்கான மகளிர் செயற்பாடுகளுக்கான தேசிய அதிகாரசபை உஹன மற்றும் மஹா ஓயா பிரதேச செயலகங்களில் பெண்கள் வலுவூட்டல் வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

அம்பாறை மாவட்ட மகளிர் அபிவிருத்தி பிரிவின் மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுரேகா எதிரிசிங்க தலைமையில் இது நடைபெற்றது.

இதில் நல்லிணக்கம் மற்றும் குடும்ப வன்முறை போன்ற முக்கிய விடயங்கள் சம்பந்தமாக பெண்கள் அமைப்புகளின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

பெண்களிடையே சுயதொழிலை ஊக்குவிக்கவும் வலுப்படுத்தவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்கு நிதி ரீதியாக வலுவூட்டுவதன் மூலம் நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தினசரி கணக்கீடு முறைகள் ஒரு நாள் வணிகப் பதிவுத் திட்டங்கள் மற்றும் வணிகத்தின் வருவாயை அதிகரிப்பதற்கான வணிக உத்திகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.





# மாணவிக்குக் கௌரவம்

பொத்துவில் வரலாற்றில் இரட்டைச் சாதனை புரிந்த க.பொ.த. உயர்தரத்தில் 3 ஏ சித்திபெற்ற றொட்டைக் கிராம மாணவி செல்வி சாந்தலிங்கம் றியோன் சியாவை காரைதீவு பிரதேச சபை யின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் திங்கட்கிழமை (11) நேரில் சென்று பாராட்டினார். அவருடன் கல்வியியலாளர் வி.ரி. சகாதேவராஜாவும் சென்றிருந்தார்.

சாதனை மாணவிக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததோடு பண அன்பளிப்பையும் வழங்கினார்.



அணில்கள் கூட்டமாக வாழும் உயிரினமாகும். மர உச்சில்களிலும், மரப் பொந்துக ளிலும், வீட்டு முகடுகளிலும் ஆள் நடமாற்றம் அற்ற களஞ்சிய சாலைகளிலும் இவை கூடுகளை அமைத்து வாழ்கின்றன.

சாதாரணமாக ஒரு அணில் ஐந்து வருடங்கள்வரை உயிர் வாழும். உரிய பாதுகாப்புகளோடு வளர்த்தால் 10 வருடங்கள்வரை உயிர் வாழ்வனவும் உண்டு. இனப்பெருக்க காலத்தில் ஆண், பெண் அணில்கள் இணை சேர்ந்ததன் பின்னர் இரண்டும் சேர்ந்து கூடு கட்ட ஆரம்பிக்கும். காய்ந்த மரக் குச்சிகளையும் தேங்காய் நார்த் தும்புகளையும் பஞ்சுகளையும் கொண்டு அழகிய கூட்டை வடிவமைக்கும். இணை சேர்ந்து 35 நாள்களில் பெண் அணில், குட்டி ஈனும். குஞ்சுகள் கண் திறக்காது, மயிர்கள் இன்றி, பற்கள் இன்றி, நகங்கள் இன்றி வெளுத்தும் பழுப் பாகக் காணப்படும். அணில்கள் இனப்பெருக்கக் காலம் பெப்ரவரி முதல்



# அணில்களிடம் கற்றுக் கொள்வோம்

மே மாதம்வரை. கர்ப்பகாலம் மொத்தம் 44 நாள்கள். பொதுவாக ஒரு கர்ப்பத்தில் 2 முதல் 4 குட்டிகள் வரை வருடத்தில் ஒரு தடவையோ அல்லது இரண்டு தடவைகளோ குட்டி ஈனும்.

அணில்கள் Sciuridae எனும் கொறித்துண்ணும் பாலூட்டி விலங்கினக் குடும்பத்தைச் சேர்ந் தவை. இவை அமெரிக்காவையும், ஐரோப்பாவையும் ஆப்பிரிக்கா, இந்தியா போன்ற இடங்களைத் தாய் நாடாக கொண் டவை.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் மேற்கு ஆஸ்திரேலியாவுக்கு அணில்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. உலகெங்கிலும் 200 வகையான அணில் இனங்கள் கண்டறியப் பட்டுள்ளன. அவற்றில் மர அணில் அல்லது நரை அணில் (Grizzled Squirrel), நில அணில், இந்தியச் சாம்பல் அணில், சிவப்பு அணில், சிப்மன்க் (Chipmunks), Marmots, Prairie Dogs) என்பன அனைத்தும் அணில் குடும்பத்தின் பல வகைகளாகும்.

அணில்கள் குட்டி போட்டு தங்கள் இனத்தைப் பெருக்குகின்றன. அணில்கள் தங்களுக்கு ஆபத்து வரும் போது பயங்கரமாக ஒலியெழுப்பி எதிரியின் கவனத்தைத் திசை திருப்பும்.

40 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே அணில்கள் வாழ்ந்துள்ளன என ஆராய்ச்சிகள் கூறுகின்றன . இது பல இடங்களில் செல்லப்பிரா ணியாக வளர்க்கப்படுகிறது.

பிறக்கும்போது, உடல், 1 அங்குல நீளம் இருக்கும். எட்டு வாரங்கள் வரை கண்களை திறக்காது. அப் போது உடல் முழுவதும் முடி வளரும் கொறிக்க வசதியாக பற்களும் முளைக்கும். பின், கண்கள் திறந்து உலகை பார்க்கும். மரக்கிளையில் தீட்டி, பற்களை கூர்மையாக்கி கொள்ளும். அணில் களுக்கு 20-22 பற்கள் உள்ளன, மேலும் அவை வளர்ச்சியை நிறுத் தாது.

உண்மையில், அவர்களின் பற்கள் தினசரி 0.16 செ.மீ. அளவுக்கு வளரும்.

அணில் ஏன் எப்பொழுதும் கொறித் துக்கொண்டே இருக்கிறது தெரியுமா? அதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. அணிலுக்கு 4 முன்பற்கள் இருக்கும். இந்த முன்பற்கள் மிக நீளமாக இருக்கும். அதுமட்டுமல் லாமல் கூர்மையாகவும் தொடர்ந்து வளரக்கூடிய தன்மை கொண்டது. ஆண்டுக்கு அரை அடி நீளம் வளர்ந்து வளரும். இதனால்தான் அணில்கள் மரப்பட்டை, பழ கொட்டைகளை விதைகள் மற்றும் கையில் கிடைத்தவற்றை தொடர்ந்து கொறித்துக் கொண்டே இருக்கும். இப்படி அணில்கள் கொறிக்காவிட்டால் பற்கள் தொடர்ந்து நீளமாக வளர்ந்து விடும். அப்படி நீளமாக வளர்ந்து விட்டால் அதன் வாயை அசைக்க முடி யாது. இதனால் அவை பட்டினியில் இறக்கவும் நேரிடும். ஆகையால் தான் கொறித்துக்கொண்டே இருக்கிறது.

இவை பற்களால் தோட்டத்தில் குழி தோண்டி நாசமும் செய்யும் பழம், காய்கறிகளை மரத்திலே கடித்து குதறி சேதமும் விளைவிக்கும். அதே நேரம் பழம், காய்கறிக ளோடு தீமை செய்யும் பூச்சிகளையும் விழுங்கி, விவசாயிக ளுக்கு நன்மையும் செய்கிறது. பொதுவாக அணில்கள் தாங்கள் மண்ணுக்கடி யில் சேமித்து வைக்கும் விதைகளில் பாதி மரங்களாகவும், செடிகளாகவும் வளர்ந்து நமது பூமிக்கு வளம் சேர்க்கின்றன என்பது நாம் அறிந்த விடயம்! அது எவ்வாறு தெரியுமா?

அணில் மரத்தில் இருந்து எடுக் கும் பழ கொட்டைகளை எல்லாம் பிறகு சாப்பிடுவதற்காக ஒளித்து வைத்தி ருக்கும். ஆனால் இதில் 30 சதவிகி தத்தை மட்டுமே திரும்ப எடுக்கும். மீதி 70 சதவிகிதத்தை மறந்துவிடும். அணில் மறந்து போவதால் அந்த கொட்டைகளிலிருந்து அதிக மரங்கள் முளைக்கிறது. அது மட்டுமல்லாமல் ஒரு அணில் மறைத்து வைத்திருக்கும் பழ கொட்டைகள், விதைகள் வேறு பல விலங்குகளும், பிற அணில்களும் சாப்பிடும். அது போக மீதி இருக்கும் 70 சதவிகிதம் கொட்டைகளை மறந்து விடும். இதனால் அதிக அளவில் மரங்களை காடுகளில் வளர உதவி புரிகிறது. இவ்வாறு காட்டை பாதுகாத்து வளர்ப்பதில் அணிலுக்கு முக்கிய பங்கு உண்டு.

அணிலால் உடல் நீளத்தைப் போல 10 மடங்கு தூரத்துக்குக் குதிக்க முடியும். அணில் 30 மீற்றர் உயரத்திலிருந்து கீழே விழுந்தாலும் அதற்கு எந்தக் காயமும் ஏற்படாது. கீழே குதிக்கும் பொழுதும் விழும் பொழுதும் அணில் தன்னுடைய வாலை சமநிலையில் பாராசூட்டை போல வைத்துக் கொள் ளும். இதனால் எந்த காயமும் அணி லுக்கு ஏற்படாது.

அணில் மிகவும் திறமைசாலியா னது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# அணில்களிடம்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன்னுடைய உணவை தேடுவ தற்காக அது பலவிதமான குறுக்கு வழிகளைக் கையாள்கிறது. பல வழிகளை மேற்கொண்டு மிகவும் புத்திசாலித்தனமாக, தந்திரமாக, எளிய வழிகள் மூலம் அது தன்னுடைய உணவை தேடுகிறது. அணிலின் பார்வை திறன் மிகவும் கூர்மையாக இருக்கும். இதனால் மிக விரைவாகவே மற்ற எதிரி விலங்குகள் எங்கு செல்கிறது, எங்கு இருக்கிறது என தெரிந்து கொண்டு அதற்கேற்ப எதிரி விலங்குகளிடம் சிக்காமல் விரைவாக தப்பிச் செல்லும்.

காட்டில் வாழும் பாலூட்டி விலங் குகளில் அணில் மட்டுமே அதிகமாகப் பகலில் வெளியே சுற்றித்திரியும். ஒரு ஆண் அணில் பெண் அணிலை சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் இருந்தாலும் அதன் மணத்தை வைத்துக் கண்டுபிடித்து விடுமாம்.

ஆஸ்திரேலியா, அண்டார்டிகா என ஒவ்வொரு கண்டத்திலும் மொத்தமாக 275 வகையான அணில்கள் உள்ளன. அணில்கள் ஒவ்வொரு வாரமும் தங்களுடைய உடல் எடை அளவுக்குச் சாப்பிடும். சராசரியாக வருடத்துக்கு 680 கிராம் உணவைச் சாப்பிடும்.

அணில்கள் பொதுவாக மணிக்கு 16 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடக் கூடியவை. இருந்தாலும் ஒரு சில அணில்கள் மணிக்கு 32 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடும் என்பது கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

அணில்கள் ஒன்றுக்கொன்று தொடர்புகொள்ள பல்வேறு வகையான சப்தங்களையும், ஒலிகளையும் ஒருசில வாசனை மூலமாகவும் தொடர்பு கொள்கின்றன. ஆபத்து ஏற்படும் போது மற்றவர்களை எச்சரிக்க அணில் தன்னுடைய வாலை பயன்படுத்துகிறது அணில் இனங்களில் மிகச்சிறியது.

ஆப்பிரிக்க பிக்மி அணில் ஆகும். இது சுமார் 10 சென்றி மீற்றர் நீளம் கொண்டது.மிகப்பெரிய அணில் இந்திய ராட்சத அணில் (Indian giant squirrel) ஆகும். இது 3 அடி நீளம் வரை வளரும். அணில் களில் 44 வகையான பறக்கும் அணில் வகைகள் இருக்கிறது. உண்மையில் இது பறப்பதைப் போல இருந்தாலும் உடலில் இரு பக்கமும் ஒரு விரியும் சவ்வை பயன்படுத்தி காற்றில் சறுக்கி செல்கிறது. அது அதனுடைய மணிக்கட்டிலிருந்து கணுக்கால்வரை நீண்டிருக்கும் சவ்வை விரித்து ஒரு பாராசூட்டில் மனிதர்கள் இறங்குவது போல இறங்கும். இது இயற்கை அணிலுக்கு கொடுத்த மிகப்பெரிய பரிசு.

ஏன் அணிலுக்கு பிள்ளை என்று சொல்கின்றார்கள்? என்று பல முறை யோசித்ததுண்டு. இம்முறை அணில் பற்றி தகவல் சேகரிக்கும் போதுதான் அந்தக் கேள்விக்கான விடை கிடைத்தது.



தமிழில் மனிதர் களுக்கு மட்டுமல்லாது சில விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் மரங்களுக்கும் கூட பிள்ளை என் னும் சொல்லைச் சேர்த்து அழைப் பர்.

உதாரணமாக கீரிப்பிள்ளை, கிளிப்பிள்ளை, தென்னம்பிள்ளை. இது ஏனெனில் மனிதர்களுக்கு அதிகம் பயனளிக்கின்ற, மனிதர்களோடு இலகுவில் பழக்கமடைகின்ற இயல்பு களைக் கொண்டிருப்பதால் பண்டைய கால மக்கள் வீட்டுப் பிள்ளையை அழைப்பதுபோல் பிள்ளை என்ற சொல் லையும் சேர்த்து அழைத்துள்ளனர்.

அணில், கீரி, கிளி, தென்னை, என்பன கூட மனிதர்களுக்கு மிக வும் பயனுடையனதானே. இவற்றின் குறும்புத்தனமான செயல்களி னாலோ என்னவோ அவற்றுக்கு பிள்ளை என் றும் கூறுகின்றனர்.

### அணில்கள் மனிதர்களுக்கு கற்றுத்தரும் பாடங்கள்

பெண் அணில் எப்போதும் தனக் கும் தனது குட்டிகளுக்கும் உணவு தேடிக் களைப்போடு கூடு வரும் ஆண் அணிலை முத்தங்கள் கொடுத்தும், கெஞ்சிக் குலாவியும் வரவேற்குமாம். ஆண் அணில் எப்போதும் பெண் அணிலுக்கு அழகிய மலர்களையும், பாதாம் கொட்டைகளையும் பரிசுகளாக கொடுத்து அன்பை வெளிப்படுத்துமாம். பெண் அணிகள் எங்கயாவது அனா தரவான குட்டி அணிலைக் கண்டால், உடனடியாக உணவு தேடி வந்து கொடுக்குமாம். மூன்று நாள் பார்த்து விட்டு, தாய், தந்தை அற்ற அநாதை என்று உறுதி செய்த பிறகு அதனை தனது கூட் டுக்கு அழைத்துச் சென்று உணவ ளித்து, தன் குட்டிகளில் ஒன்று போல குதூகலமாக வாழவிடுமாம்.

அணில்களிடம் முக்கியமான ஒரு சிறப்பு குணம் உள்ளது. அணில் குட்டிகளின் தாய் உணவு தேடச் செல்லும் பொழுது மற்ற விலங்குகளால் கொல்லப்பட்டால் அதன் குட்டிகளை மற்ற அணில்கள் தத்தெடுத்து வளர்க்கும் இயல்பு கொண்டது. ஒரு கூட்டுக் குடும்பம் போல இவைகளின் வாழ்க்கை இருக்கும்.புதிதாகப் பிறந்த அணில் குட்டி ஒரு இன்ச் நீளம் மட்டுமே இருக்கும்.

அணில்கள் எப் பொழுதும் ஆர்வ மாகவும், உணவைப் பெறும் வாய்ப் புக்காக வும் காத்திருக்கும். தோட்டத்தில் அணில் கள் எப்பொழுதும் ஆராய்ந்து, ஒவ்வொரு இலையின் கீழும் பார்த்துக்கொண்டும், தோட் டத்தில் உள்ள செடிகளின் வழியே சலசலத்துக் கொண் டும், ஜன்னலுக்கு எதிரே உள்ள மரக்கி ளையில் அமர்ந்து, நாம் என்ன செய்கிறோம் என்று ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருக்கும். இந்த ஆய்வில் அடிக்கடி நாம் ஜன்னலில் இருந்து வீசி எறிந்த ஏதாவது ஒரு விதையை அல்லது பழத்தின் துண் டுகளை அவை கண்டுபிடிக்கும், பாது காப் பான இடத்துக்கு விரைந்து, தங்க ளால் முடிந்த அனைத்தையும் தின்று விடும்.

நாம் அணில்களைப் போலவே செயல்பட வேண்டும் நிச்சயமாக பாதுகாப்பை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். சிரமத்தின் மத்தியிலும் உணவுகளை சேகரிக்க முயற்சிக்கும் அவை பின் வாங்கிக் கொண்டு செல்வதில்லை. அவற் றின் புத்திசாலித்தனம்தான் இதற் குத் தெளிவான காரணம் என்று நினைக் கிறேன்.

இவை மனிதனுக்கு விடாமுயற்சி யையும் வாழ்க்கை ஒரு போராட்டம் என்பதையும் நினைவூட்டுகிறது. அணில்கள் சீக்கிரம் எழும் கலையை முழுமையாக்கியுள்ளன. கோடை காலத்தில், அவர்கள் சூரிய அஸ்த மனத்துக்கு சுமார் இரண்டு மணி நேரத்துக்கு முன்பு தங்கள் செயல் பாடுகளை தொடங்குகிறது. குளிர் காலத்தில், அணில்கள் பகலின் நடுப்பகுதிக்கு முன்பே தங்கள் செயல்பாடுகளை முடித்துவிட்டு, கூட்டுக்கு விரைவாகச் சென்று ஓய்வெடுக்கின்றன. இரவுக்குப் பிறகு அணில் அரிதாகவே கூட்டை விட்டு வெளியேறும். இவ்வாறு அணில்களின் குடும்பவியல் வாழ் வமைப்பு மிகவும் அற்புதமானது. அன்பு, பாசம், பரிவு, காதல், கவனிப்பு என நல்தோர் குடும்ப வாழ்வுக்கான அத்துனை குணாதிச யமும் பொங்கி வழியும் அணில் தம் பதிகளின் குடும்ப வாழ்க்கை மானி டமாகிய நமக்கு நல்லதொரு முன் மாதிரியாகத் திகழ்கின்றது.

**தருமலிங்கம் லுகிர்தா**
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# உக்ரைன் ஜனாதிபதியை அடுத்த வாரம் சந்திக்கின்றார் அமெரிக்க ஜனாதிபதி!



உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை அடுத்த வாரம் சந்திக்கவுள்ளார்.

அமெரிக்காவுக்கான விஜயம் மேற்கொண்டு, உக்ரைன் ஜனாதிபதி ஜோ பைடனை வெள்ளை மாளிகையில் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது என சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், அடுத்த வாரம் நியு யோர்க்கில் ஆரம்பமாகவுள்ள, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத்தில் இரண்டு நாடுகளின் தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர். இதன்போதே இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது என குறிப் பிடப்படுகின்றது.

உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இடையில், கடுமையான போர் இடம்பெற்று வருகிறது. இந்த நிலையில், வடகொரிய ஜனாதிபதி, ரஷ்ய ஜனாதிபதி ஆகியோருக்கு இடையில் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இதன்போது, வடகொரிய ரஷ்யாவுக் கான ஆயுதங்களை வழங்க முன்வந் துள்ளது.

இதனையடுத்து, அமெரிக்க ஜனா திபதியுடனான சந்திப்புக்கு பின்னர், உக்ரைனுக்கு மேலதிக ஆயுதங் களை, அமெரிக்கா வழங்கும் என எதிர்ப் பார்க்கப்படுகின்றது.

## மாலியில் 46 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை: பதில் தாக்குதலில் 10 இராணுவ வீரர்கள் பலி!



ஆபிரிக்க நாடான மாலியில் 46 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட் டுள்ளனர்.

அத்துடன், பதில் தாக்குதலில் 10 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான மாலியில் கடந்த 2020 ஆம் ஆண்டு மக்களாட்சி கவிழ்க்கப்பட்டு இராணுவ ஆட்சியில் ஐ.எஸ்., அல்கொய்தா உள்ளிட்ட பயங் கரவாதிகள் தலைதூக்கியுள்ளனர்.


இதனை தொடர்ந்து நாட்டின் சாகல் மாகாணத்தை அடிப்படையாக கொண்டு இயங்கி வரும் பயங்கரவாதிகளை ஒழிக்க இராணுவத்தினர் கடுமையாக முயற்சித்து வரும் நிலையில் இருதரப்புக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் கவோ பகுதியின் போரெம் நகரில் இராணுவ வீரர்கள் கவச வாகனங்களில் ரோந்துப்பணியினை மேற்கொண்ட நிலையில், பயங்கர வாதிகள் வெடிகுண்டுகள் பொருத்திய வாகனங்களில் இராணுவ வீரர்களின் வாகன அணிவகுப்பிற்குள் திடீரென புகுந்து தற்கொலை தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது இராணுவத்தினர் பயங்கரவாதிகள் மீது மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 46 பயங்கரவாதிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலின்போது தாக்குத லில் 10 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள் ளனர்.

## கனடாவில் வீட்டு வாடகை அதிகரிப்பு!



கனடாவில் வீட்டு வாடகை தொகைகள் தொடர்ச்சியாக அதிகரித்து செல்கின்றன என்று தகவல் வெளியா கியுள்ளது.

வீடுகளின் வாடகை தொடர்பில் கனடாவின் பிரபல இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ள அண்மைய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

சராசரியாக புது வாடகை குடியிருப் பாளர் ஒருவர் மாதம் ஒன்றுக்கு 2117 டொலர்களை வாடகையாக செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தின் சராசரி வாடகை தொகையானது சுமார் 9.6 வீதத்தி னால் அதிகரித்துள்ளது.

கடந்த மே மாதம் முதல் சராசரியாக வீட்டு வாடகை தொகையானது சுமார் நூறு டொலர்களினால் மாதாந்தம் அதிகரித்துச் செல்லும் போக்கு பதிவாகியுள்ளது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# கேரளாவில் நிபா வைரஸ் தொற்று பரவல்: இருவர் உயிரிழப்பு; மூவருக்கு தொற்று உறுதி!





கேரள மாநிலம் – கோழிக்கோடு மாவட்டத்தை சேர்ந்த இருவர் நிபா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளனர்.

காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இருவர் அடுத்தடுத்து உயிரிழந்துள்ளனர்.

அவர்களிடமிருந்து பெறப்பட்ட மாதிரியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் நிபா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முதலில் பலியான நபரின் குடும்பத்தினரும் காய்ச்சலால் பாதிக்கப் பட்டிருந்தனர்.

இதையடுத்து, அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 9 வயது மகன் மற்றும் மைத்துனருக்கு நிபா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நிபா வைரஸால் இருவர் பலியானதைத் தொடர்ந்து, அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களின் பட்டியலை மாநில சுகாதாரத்துறையினர் சேகரித்துள்ளனர்.

தொற்றுக்கு உள்ளானவர்களுடன் குடும்பத்தினர், உறவினர்கள் அக்கம் பக்கத்தினர் மற்றும் அவர்கள் இருவரும் மருத்துவமனையில் இருந்த போது சிகிச்சை அளித்தவர்கள்என 168 பேர் கண்டறியப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்கள் தங்கியிருந்த பகுதிகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

கோழிக்கோடு மாவட்டத்தில் 7 ஊராட்சிகளில் 47 தொகுதிகள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறி விக்கப்பட்டுள்ளன. கட்டுப்பாட்டு மண்டலங்களுக்குள் வேறு பகுதியை சேர்ந்த பொதுமக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.


இந்த நிலையில், நிபா தொற்று பாதித்து இறந்தவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களாக பட்டியலிடப்பட்டவர்களில் சிலரது மாதிரி பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருந்தது.

அதில் 24 வயது மதிக்கத்தக்க சுகாதார பணியாளர் ஒருவருக்கும் நிபா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

ஏற்கனவே 4 பேர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், சுகாதார பணியாளரும் பாதிக்கப்பட்டு உள்ளதால், கேரளாவில் நிபா வைரஸ் பாதித்த நபர்களின் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது.

தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டுள்ள முதலில் பலியான நபரின் மகன், மைத்துனர், சுகாதார பணியாளர் உள்ளிட்ட 3 பேரும் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

# சூரியனை நெருங்கும் ஆதித்யா எல்-1: சுற்றுவட்டப்பாதையை அதிகரித்தது!




சூரியனை ஆராயவுள்ள ஆதித்யா எல் –1 விண்கலம் கடந்த செப்டம்பர் 2 ஆம் திகதி பி.எஸ்.எல்.வி.சி.57 விண்கலம் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்த விண்கலத்தின் முதல் சுற்றுவட்டப்பாதை கடந்த 3 ஆம் திகதியும் இரண்டாவது சுற்றுவட்டப்பாதை கடந்த 5ஆம் திகதியும் வெற்றிகரமாக உயர்த்தப்பட்டன.

இந்த நிலையில் 3ஆவது முறையாக சுற்று வட்டப்பாதை கடந்த 10 ஆம் திகதி அதிகாலை உயர்த்தப்பட்டது.

3 கட்டங்களை வெற்றிகரமாக கடந்த ஆதித்யா எல் –1 விண்கலத்தின் 4 ஆவது சுற்று வட்டப்பாதையை உயர்த்துவதற்கான கட்டளைகள் பெங்களூர் மற்றும் மொரீசியஸில் இருந்து அனுப்பப்பட்டன. இந்த புதிய சுற்று வட்டப்பாதை குறைந்தபட்சம் 256 கிலோ மீற்றரும், அதிகபட்சம் ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 973 கிலோ மீற்றராகவும் அதிகரிக்கப் பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக புவி வட்டப்பாதையில் இருந்து ட்ரான்ஸ் – லொக்ராஜன் பொயிண்ட் என்ற புள்ளிக்கு அனுப்பும் இறுதிகட்ட பணிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 2 மணிக்கு நடக்கும் என்று இஸ்ரோ அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

# இரண்டாக உடைந்து விழுந்த விமானம்!



மும்பை விமான நிலையத்தில் தரையிறங்கும் போது சிறிய ரக விமானம் ஒன்று ஓடுபாதையில் இருந்து விலகி பாதியாக உடைந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கனமழை காரணமாக இந்த விபத்து நேர்ந்துள்ளது. அதில் பயணம் செய்த எட்டு பேர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, விமான நிலையத்தில் உள்ள இரண்டு ஓடுபாதைகளும் சிறிது நேரம் மூடப்பட்டுள்ளன.

இதன் காரணமாக, மும்பை விமான நிலையத்துக்கு வந்த 9 விமானங்கள் வேறு விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்டன. மும்பை விமான நிலையத்தில் கடுமையான மழை பதிவாகியமை இந்த விபத்திற்கு காரணமாக கூறப்படுகிறது.

# மீள்குடியேற காணிகள் வழங்கப்பட்ட வலி. வடக்கு மக்களின் அவல நிலை

பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் தமக்கு குறிப்பிட்ட அளவு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ள போதும் குறித்த காணிகளில் மக்கள் குடியேறும் வகையில் வீடுகளை அமைக்க அரசு இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கவில்லை என்று வலிகாமம் வடக்கு பலாலி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வலி வடக்கு பலாலி கிராம மக்கள் தமது சொந்த நிலங்களில் இருந்து 1990 ஆம் ஆண்டு பாதுகாப்புக் காரணங்களுக் காக இடம் பெயர்ந்து பல்வேறு இடைத்தங்கல் முகாம் மற்றும் உற வினர்கள் வீடுகளில் வாழ்ந்து வந்த னர்.

சின்னவளை, பொலிகண்டி, நிலவன், கே.கே.எஸ்.மற்றும் ஆனைப்பந்தி ஆகிய ஐந்து இடைத்தங்கல் முகாம்களில் கடந்த 33 வருடங் களாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்த முகாம்களில் மக்கள் எவ் வித அடிப்படை வசதிகளும் இன்றி பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியிலும் வாழ்ந்து வருகின்றனர்.

அந்த மக்கள் தொடர்ந்தும் மனித நேய அமைப்புக்களின் உதவியுடன் பல்வேறு போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுத்து வந்தனர்.

இந்த நிலையில் சுமார் 33 வருடங்களின் பிற்பாடு பலாலி வடக்கு (ஜே-254) கிராம அலுவலர் பிரிவில் மேய்ச்சல் தரைக் கென ஒதுக்கப்பட்ட அரச காணி அளவீடு செய்யப்பட்டு, மக்களை மீள்குடியமர்த்த நடவ டிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் அந்த மக்களின் சொந்த பூர்வீக காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்று அந்த மக்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர். அக்காணிகள் படையினர் வசம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

சுமார் 33 வருடங்கள் முகாம் களில் இருந்து பல்வேறு துன்ப துயரங்களுக்கு முகம் கொடுத்த தாங்கள் முகாம்களில் இருந்து முத லில் வெளியே வர வேண்டும் என்ற நோக்கத்துடன் இக்காணிகளை பெற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித் ததாகவும் அந்த மக்கள் தெரிவிக் கின்றனர்.

5 முகாம்களை சேர்ந்த 49 குடும்பங்கள் வாழ்ந்து வந்த நிலையில் 45 குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய 4 குடும்பங்களுக்கு காணி வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று அதிகாரிகள் தெரி விக்கின்றனர்.

45 குடும்பங்களுக்கும் 13 அரை ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இந்து கோவிலுக்கு 10 பரப்பு காணியும், பாடசாலைக்கு என 2 ஏக்கர் காணியும் ஒதுக்கப்பட்டுள் ளது. ஒரு குடும்பத்துக்கு தலா 2 பரப் பளவு காணி வீதம் ஒதுக்கப்பட் டுள்ளது.

மெசிடோ நிறுவனத்தின் உதவியுடனும் தொடர்ச்சியாக முன்னெ டுத்து வந்த போராட்டங்களின் பலனாகவே இக்காணி கிடைத்தது என்று அந்த மக்கள் தெரிவித்தனர்.

மீள் குடியமர்வுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தக் காணியானது மேய்ச்சல் தரவைக்குரிய காணியாக உள்ளது. இந்தக் காணியில் மழை காலங் களில் வெள்ள நீர் தேங்க கூடிய நிலை காணப்படுகிறது என்று அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்தக் காணியானது மக்கள் வசிப்பதற்கு உகந்தது இல்லை எனவும், இந்தக் காணியில் தாங்கள் இதற்கு முன்னர் வசிக்க வில்லை என்றும் மக்கள் வசிக்காத காணியையே தமக்கு வழங்கியுள்ளனர் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு குடியமர்வதாக இருந்தால் காணிகளுக்குச் சுற்று வேலி அமைத்தல் வேண்டும், தற்காலிக கொட்டகைகள் அமைக்க வேண்டும், குடி தண்ணீர் வசதி, மலசல கூட வசதி மற்றும் மின்சார வசதிகள் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

இந்த மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலை யில் தங்களால் உடனடியாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என்று தெரிவித்துள்ளனர். அதற்கான உதவிகளை அரசிடம் இருந்தும் அரச சார்பற்ற அமைப்புகளிடம் இருந்தும் எதிர்பார்த்துள் ளனர்.

எனினும் எதிர் காலத்தில் தமது பூர்வீகக் காணிகளையே மீட்டெடுப்பதே தமது இலக்காக உள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

# சுகாதாரக் கல்வி விழிப்புணர்வு!

(பழுவூரான்)

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மூலம் சக்ஸஸ் முன்பள்ளி மாணவர்களுக்கு சுகாதாரக் கல்வி பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு மற்றும் பரிசோதனை ஆகியன வாழைச்சேனை சக்ஸஸ் முன்பள்ளியில் இடம்பெற்றன.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ மாது பீ.வசந்தி, பாடசாலை பற்சிகிச்சையாளர் எஸ்.எப்.ஷபாயா மற்றும் சுகாதாரப் பணிமனை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வை வழங்கினர்.

இதன்போது, முன்பள்ளி மாணவர்களின் நிறை, உயரம், உடற் திணிவுச் சுட்டி என்பன மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ மாது பீ.வசந்தியால் பரிசோ தனை செய்யப்பட்டது.

சிறுவர் ஆரோக்கியம் மற்றும் விருத்திப் பதிவேடு பதியப்பட்டு, மேற்பார்வை செய்யப்பட்டது.

அத்தோடு பாடசாலை பற்சிகிச்சையாளர் எஸ்.எப்.ஷபாயாவால் முன்பள்ளி மாணவர்களது வாய் வழிச் சுகாதார பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.





## 34ஆவது இளைஞர் விளையாட்டு விழா

# ஆண், பெண் இரு பிரிவுகளிலும் சாதித்துக் காட்டியது கார்மேலியன்ஸ்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இளைஞர் கழக விளையாட்டு விழாவின் கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் ஆண், பெண் இரு பிரிவு களிலும் மணல்சேனை கார்மேலியன்ஸ் அணிகள் சம்பியன்களாகின.

கல்முனை வடக்கு பிரதேச செயலக இளைஞர் கழகத்தின் 34ஆவது ஆணடு விளையாட்டுத் தொடரின் கடற்கரை கரப்பந்தாட்டம் கல்முனை கடற்கரை மைதானத்தில் இடம் பெற்றது.

ஆண்களுக்கான கடற்கரை கரப்பந் தாட்டப் போட்டியில் மணல்சேனை கார்மேலியன்ஸ் இளைஞர் கழகம் சம்பியனாகவும், கல்முனை றோயல் இளைஞர் கழகம் இரண்டாம் இடத்தை யும் பெற்றன.

அதேவேளை, பெண்களுக்கான போட்டியிலும் மணற்சேனை இளைஞர் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டது.

# 13, 17 வயது வலைப்பந்தாட்டத்தில் சம்பியானனது குருநாகல் மலியதேவ







(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடை யிலான மைலோ பாடசாலை வலைப் பந்தாட்டப் போட்டியில் குருநாகல் மலியதேவ பெண்கள் கல்லூரியின் 13 மற்றும் 17 வயதுப் பிரிவு அணிகள் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளது.

அதேவேளை, இதே பாடசாலையின் 15 வயதுப் பிரிவினர் இரண்டாம் இடத் தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.



# பெண் தலைமைக் குடும்பத்தை வலுவூட்டும் கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர் )

கனேடிய உதவியின் கீழ் இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் உள்ளூர் பெண் தலைமைத்துவத்தை வலுவூட்டுவதன் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களின் சேவை களை நவீனமயமாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச சபையில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன பிரதம நிறைவேற்று அதிகாரி ஹேமந்தி குணசேகரவின் ஆலோசனை, வழிகாட்டலின் கீழ், இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் எம்.ஐ.எம். வலித்தின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பாசிக்குடா அமந்தா விடுதியில் நடைபெற்ற இந்நிகழ்வில் உள்ளூர் பெண் தலைமைத்துவத்தை வலுவூட்டுவதன் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை நவீன மயமாக்கும் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதில் கோறளைப்பற்று பிரதேச சபையின் செயலாளர், முன்னாள் தவிசாளர் உள்ளிட்ட செயற்குழு உறுப்பினர்கள் பங்குகொண்டனர்.



# தேசிய மட்டத்துக்குத் தெரிவு

(சப்னா றிபாஸ்)

தேசிய மட்ட ஆங்கில தின போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட பாலமுனை அல் - ஹிதாயா மகளிர் கல்லூரி மாணவி பாத்திமா லெமாவை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மற்றும் பாடசாலை சமூகத்தினரின் ஏற்பாட்டில் அதிபர் பீ.முஹாஜிரீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மண வியையும் அவரின் தாயாரும் பான்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு மாணவர்கள் புடைமூழ மாலை அணிவித்து வர வேற்கப்பட்டனர்.

இதேவேளை இந்த மாணவியைப் பயிற்றுவித்த ஆங்கில ஆசிரியர், அதிபர் ஆகியோரை வாழ்த்தி நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.